# நிவாரண மையப் பணிகள் குழு (Relife Center/Shelter Committee)

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: டாக்டர். சு.பிரபாகர், இ.ஆ.ப.,

ந.க.21496/2018/பே.மே. நாள்: 16.10.2018

பொருள்: பேரிடர் மேலாண்மை - வழகிழக்குப்பருவ மழை 2018 - கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வழகிழக்குப்பருவ மழையின் பொருட்டு வருவாய் கோட்ட அளவில் நிவாரண மையப் பணிகள் குழு நியமனம் செய்து ஆணையிடுதல்.

பார்வை:

1. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வடகிழக்கு பருவமழை-2018 முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கை Rc.No. N.C.I (4)/3838/2018, நாள்: 25.08.2018.
2. மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற வடகிழக்குப் பருமழை தயார் நிலைக் கூட்ட நடவடிக்கைகள் நாள்: 18.09.2018.
3. வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் காணொலிக் காட்சிக் பணி ஆய்வுக் கூட்டம் நாள்: 24.09.2018.

---------

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எதிர்வரும் வழகிழக்குப்பருவ மழை காலத்தில் பேரிடர் நிகழ்வுகளின்போது பொது மக்களை பாதுகாப்பாக பேரிடர் நிகழ்வு பகுதியிலிருந்து வெளியேற்றி பாதுகாப்பான பகுதிக்கு கொண்டு செல்லும் பொருட்டு நிவாரண மையப் பணிகள் (Relief Center / Shelter Committee) குழு நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

1. வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
2. கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர், கிருஷ்ணகிரி.
3. கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
4. இணை இயக்குநர் (நலப் பணிகள்), கிருஷ்ணகிரி.
5. துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்).
6. அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
7. மாவட்ட சமூக நல அலுவலர், கிருஷ்ணகிரி
8. மாவட்ட வழங்கல் அலுவலர், கிருஷ்ணகிரி,
9. மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கிருஷ்ணகிரி,
10. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிருஷ்ணகிரி
11. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), தர்மபுரி மண்டலம், தர்மபுரி.
12. நகராட்சி ஆணையாளர், கிருஷ்ணகிரி / ஓசூர்,
13. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், கிருஷ்ணகிரி.
14. அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
15. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
16. வட்டார போக்குவரத்து அலுவலர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
17. கோட்ட மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கிருஷ்ணகிரி / ஓசூர்.
18. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
19. அனைத்து கூட்டுறவு சங்க செயலாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.

i. வருவாய் கோட்ட அளவில் வருவாய் கோட்ட அலுவலர் கோட்ட பேரிடர் மேலாண்மை அலுவலராகவும், நிவாரண மையக் குழுவின் தலைவராகவும் செயல்படவேண்டும். தமது கோட்டத்திற்குட்பட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் பல்துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து நிவாரண மையப் பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

ii. கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் தமது சார் நிலை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் மூலம் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு தக்க உதவிகளையும் / நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

iii. மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமையம் / பாதுகாப்பான தங்குமிடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் உணவு ஆகியவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

iv. நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்படவேண்டும்.

v. முதலுதவி மற்றும் மருத்துவ வசதிகளை அளிக்கவும், நோய் பரவலை தடுக்கும் வகையில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

vi. ஊடக மேலாண்மை மூலம் தேவையான தகவல்களை தருதலும், பெறுதலும் செய்திட வேண்டும்.

vii. நிகழ்வுகள் குறித்து உண்மையான, தெளிவான அறிக்கையை உடனுக்குடன் பொறுப்பு அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

(ஒம்/-) சு.பிரபாகர்,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

/ உண்மை நகல் /

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
கிருஷ்ணகிரி.

பெறுதல்

சம்மந்தப்பட்ட அலுவலர்கள். (மின்னஞ்சல் வாயிலாக)
(அலுவலகத் தலைவர்கள் தங்களின் சார்நிலை அலுவலர்கள் / பணியாளர்களுக்கு உத்தரவு நகலை சார்வு செய்யவேண்டும்)

நகல்: காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி,

நகல்: திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி.

நகல் : செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (நீ.ஆ.து), தர்மபுரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு,

நகல் : மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு.

நகல் : கூடுதல் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-600 005 - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.